செ.வெ.எண். 1048 நாள் 30.11.2010

# அருந்ததியர் சான்றிதழ் வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவுசெய்ய மீண்டும் ஒரு வாய்ப்பு

தமிழ்நாடு அரசுப்பணிகளில் ஆதிதிராவிடர்களுக்கான 18 சதவீத இடஒதுக்கீட்டில், உள் ஒதுக்கீடாக 3 சதவீதம் அருந்ததியர் பிரிவுக்கு அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. வேலைவாய்ப்பு அலுவலக உயிர்ப்பதிவேட்டில் ஆதிதிராவிடர் என்று மட்டுமே பதிவு மேற்கொண்டு வந்த நிலையில், அப்பிரிவில் "அருந்ததியர்" என்பதைத் தனியாக வகைப்படுத்துமுகமாக வேலைவாய்ப்பு அலுவலகத்தால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அதன் தொடர்ச்சியாக "அருந்ததியர்" பிரிவைச் சார்ந்தவர்கள் தாங்கள் "அருந்ததியர்" என்பதைக் குறிக்கும் சான்றிதழினை வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்யவேண்டும் என்றும், அவ்வாறு பதிவுசெய்பவர்கள் மட்டுமே "அருந்ததியர்" பிரிவுக்கான காலியிடங்களுக்குப் பரிசீலிக்கப்படுவர் என்றும் நாளிதழ்களில் செய்தி வெளியிடப்பட்டன. அவ்வாறு பதிவு செய்வதற்கு 31.07.2010 வரை காலஅவகாசம் அளிக்கப்பட்டது. பின்னர் பதிவுதாரர்களின் கோரிக்கையை ஏற்று அக்காலஅவகாசம் 31.08.2010 வரை நீட்டிக்கப்பட்டது.

இருப்பினும், நிர்ணயிக்கப்பட்ட கால அளவுக்குள் "அருந்ததியர்" பிரிவைச் சார்ந்த பதிவுதாரர்கள் தங்களின் சான்றிதழை வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்யாத நிலையை மேற்கொண்டு வருகின்றனர். இதனால் வேலையளிப்பவருக்குப் பட்டியல் அனுப்பும்போது "பரிந்துரைப் பதிவுமூப்பினை" நிர்ணயிப்பதில் வேலைவாய்ப்புத் துறைக்குப் பெரும் இடர்பாடுகள் ஏற்படுகின்றன. எனவே, இதைச் சரிசெய்யுமுகமாகவும், "அருந்ததியர்" பிரிவினைச் சார்ந்த மக்களிடமிருந்து பெறப்பட்ட பல்வேறு கோரிக்கைகளைக் கருத்தில்கொண்டும், மீண்டும் ஒரு வாய்ப்பு, அருந்ததியர் பட்டதாரி ஆசிரியர் உள்ளிட்ட அனைத்து "அருந்ததியர்" பிரிவைச் சார்ந்த பதிவுதாரர்களுக்கும் அளிக்கப்படுகிறது. "அருந்ததியர்" பிரிவைச் சார்ந்த பதிவுதாரர்கள் தாங்கள் "அருந்ததியர்" என்பதைக் குறிக்கும் சான்றிதழை 10.12.2010-க்குள் அந்தந்த மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவுசெய்ய வேண்டும். அவ்வாறு பதிவு செய்பவர்களின் பெயர்கள் மட்டுமே அந்தந்த காலக்கட்டத்தில் தெரிவிக்கப்படும் "அருந்ததியர்" பிரிவு உள்ஒதுக்கீட்டுக் காலியிடங்களுக்குத் தகுதியானதாகக் கருதப்படும். குறிப்பிட்ட நாளுக்குப்பின்னர் பதிவுசெய்பவர்களின் பெயர்கள் எதிர்வரும் காலத்தில் தெரிவிக்கப்படும் காலியிடங்களுக்கான இடஒதுக்கீடுகளுக்கு மட்டுமே பரிசீலிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

28/11/10

பொ இயக்குநர்,
வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை,
கிண்டி, சென்னை-32.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9

1/1